முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி

O.S No. 172/2017

2023 ம் ஆண்டு மார்ச் மாதம் 06 ம் நாள் திங்கட்கிழமை கீழ்க்கண்ட சாட்சியின் வாக்குமூலம் (1965 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணக்குமார் Bench Clerk Gr.I அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/ பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணன் | தொழில் | : | |
| த/பெ. | : | | வட்டம் | : | |
| வயது | : | | கிராமம் | : | |
| ஜாதி | : | | மதம் | : | |

பி.வா.சா.2

<u>முதல் விசாரணை</u> :

நான் தஞ்சாவூரில் குடியிருந்து வருகிறேன் . அதற்கு முன்பு திருச்சி பாரதியார் தெரு, மேல அம்பிகாபுரத்தில் குடியிருந்து வந்தேன் . என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.3 மற்றும் 4 ல் இரண்டாவது சாட்சியாக நான் கையெழுத்து போட்டுள்ளேன். அந்த கையெழுத்து என்னுடையதுதான். அந்த ஆவணங்களில் ஒரு பிச்சை முகமது என்பவர் முதலாவது சாட்சியாகவும் , நான் அதில் இரண்டாவது சாட்சியாகவும் கையெழுத்து போட்டுள்ளோம். மேற்படி பத்திரங்களை சுலோச்சனா என்பவர்தான் எழுதிவைத்தார். மேற்படி சுலோச்சனா எழுதிய பத்திரத்தில் கையெழுத்து போட்டதை நானும் மற்றொரு சாட்சியும் பார்த்தோம் . அதைப்போன்று நான் சாட்சி கையெழுத்து இட்டதை மேற்படி சுலோச்சனாவும், மற்றொரு சாட்சியும் பார்த்தார்கள். பிச்சை முகமது சாட்சி கையெழுத்து போட்டதை நானும் சுலோச்சனாவும் பார்த்தோம்.

(குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd./- K. Babu, 06.03.2023,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.